செ.வெ. எண்.1040 நாள்.26.11.2010

செய்தி வெளியீடு

**செம்மொழி பூங்கா பொதுமக்களின் பார்வைக்கு திறந்து வைக்கப்பட்டது**

சென்னை, கதீட்ரல் சாலையில் அமைந்துள்ள செம்மொழி பூங்கா மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 24.11.2010 அன்று மாலை திறந்து வைக்கப்பட்டது. பூங்கா திறந்து வைக்கப்பட்ட முதல் நாளே சுமார் 1600க்கும் மேற்பட்ட பெரியவர்களும் மற்றும் குழந்தைகளும் இரவு 10.00 மணி வரை மகிழ்ச்சியோடு கண்டுகளித்துள்ளனர். தொடர்ந்து 25.11.2010 அன்றும் 2300க்கும் மேற்பட்ட பெரியவர்களும் மற்றும் குழந்தைகளும் செம்மொழிப் பூங்காவினை பார்த்துள்ளனர்.

இந்த நிலையில் 26.11.2010 நாளிட்ட தினமலர் (சென்னை) நாளிதழில் "பொதுமக்கள் பார்வைக்கு செம்மொழி பூங்கா திறந்துவிடப்படும் தேதி தெரியாததால், நேற்று பூங்காவை சுற்றிப்பார்க்க வந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்'' என்ற செய்தி வந்திருப்பது தவறானதாகும். மேலும் 25.11.2010 அன்று ஏராளமான பொதுமக்களும், கல்லூரி மாணவர்களும் செம்மொழிப்பூங்காவிற்கு உள்ளே செல்ல அனுமதி மறுக்கப்பட்டது என்று தெரிவித்திருப்பதும் உண்மையல்ல. குறிப்பிட்ட ஒரு சிலர் மட்டும் அனுமதிக்கப்பட்டதாக தெரிவித்திருப்பது தவறான செய்தி. இது மிகவும் வருத்தத்திற்குரியதாகும்.

பூங்கா திறந்து வைக்கப்பட்ட நாளன்றும், மறுநாள் காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை செம்மொழிப் பூங்காவை பொது மக்கள் பார்த்து வந்துகொண்டிருக்கின்ற நிலையில், பூங்காவை பார்க்க வந்தவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றதாக செய்தி வெளியிட்டிருப்பது உண்மைக்கு மாறானது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இயக்குநர்
தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் இயக்ககம்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.